Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 173 of 2024

DATE : 20.05.2025

Depositions of witness for Prosecution

PW : 6

| | | | |
|---|---|---|---|
| Name | **கணேசன்** | Caste | |
| Father/Husband's Name | **சுப்பிரமணியன்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2025

**(எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை : –**

1) நான் அழகாபுரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். கடந்த 06.11.2022ம் தேதி காலை 7மணிக்கு டீ குடிப்பதற்காக அ.சா.1ன் கடைக்கு நான் சென்றேன். அ.சா.1ன் கடைக்கு கிழக்கு பக்கம் நிறுத்தி வைத்திருந்த காரை காணவில்லை என்று என்னிடம் கூறினார். நான் சென்று பார்த்தபோது கார் நின்ற இடத்தில் கண்ணாடி உடைந்து கீழே கிடந்தது. இது சம்மந்தமாக நத்தம்பட்டி காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். அதன் பின்பு கார் கிடைத்துவிட்டதாக அ.சா.1 சொன்னார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) சம்பவம் சம்மந்தமாக நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விபரம் தெரியாது என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. காவல் துறை அதிகாரிகள் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விசாரணையின் போது சிசிடிவி காட்சி பதிவுகளை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த காட்சிகள் தெளிவாக தான் இருந்தது. அ.சா.1 விசாரணையில் காட்சிகள் தெளிவாக தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் நான் தெளிவாக காட்சிகள் தெரிந்தது என்று சொல்கிறேன் என்றால் ஆட்கள் நடமாடுவதை பார்த்தேன். சிசிடிவி காட்சிகளை கைப்பேசியில் தான் பார்த்தோம். சிசிடிவி பதிவுகளை நான் டோல்கேட் சென்றோ காவல் நிலையம் சென்றோ பார்த்தேன்

என்று சொன்னால் பார்க்கவில்லை. சிசிடிவி பதிவுகளில் காணப்பட்ட நபர்களின் விபரத்தை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு